இத் தகவலேடு குறித்த மேலதிகத் தகவலுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

NSW GOVERNMENT | Health

Tamil (PHCP) 110080

TAMIL

# Your Healthcare

Rights and Responsibilities

## உங்களுக்கான உடல்நல மற்றும் மருத்துவ கவனிப்பு

உங்களுக்குள்ள
உரிமைகளும் பொறுப்புகளும்

நோயாளிகள், கவனிப்பாளர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான ஒரு வழிகாட்டிக் கையேடு

NSW GOVERNMENT | Health

NSW DEPARTMENT OF HEALTH
73 Miller Street
North Sydney NSW 2060
Tel. (02) 9391 9000
Fax. (02) 9391 9101
www.health.nsw.gov.au

This work is copyright. It may be reproduced in whole or part for study or training purposes subject to the inclusion of an acknowledgement of the source. It may not be reproduced for commercial usage or sale. Reproduction for purposes other than those indicated above requires written permission from the NSW Department of Health.

© NSW Department of Health 2011

SHPN: (PHCP) 100495
ISBN: 978-1-74187-570-6

For more copies contact
Better Health Centre – Publications Warehouse
Locked Mail Bag 5003 Gladesville NSW 2111
Tel. (02) 9816 0452
Fax. (02) 9816 0492
TTY. (02) 9391 9900

Information Production and Distribution
Tel. (02) 9391 9186
Fax. (02) 9391 9580

Further copies of this document can be downloaded from the NSW website
www.health.nsw.gov.au

March 2011

# ஊள்ளடக்கம்


உங்களுக்கான உடல்நல மற்றும் மருத்துவ கவனிப்பு
உங்களுக்குள்ள உரிமைகளும் பொறுப்புகளும்
நோயாளிகள், கவனிப்பாளர்கள் மற்றும்
குடும்பத்தினருக்கான ஒரு வழிகாட்டிக் கையேடு............ 3

உடல்நல கவனிப்பைப் பெறல்
நல்ல உடல்நலத்திற்கு அவசியமான கவனிப்பைப்
பெறுவதற்கான உரிமை உங்களுக்குண்டு...................... 4

பாதுகாப்பு
பாதுப்பிற்கும், உயர்தரமான கவனிப்பைப்
பெறுவதற்குமான உரிமை உங்களுக்கு உண்டு........... 7

மரியாதை
மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடத்தப்படவும்,
கருத்தில் கொள்ளப்படுவதற்குமான உரிமை
உங்களுக்கு உண்டு ........................................................ 9

தொடர்பாடல்
சேவைகள், சிகிச்சை, தெரிவு வகைகள் மற்றும்
செலவுகள் குறித்து ஒளிவு-மறைவற்ற முறையில்
தகவல்கள் வழங்கப்படுவதற்கான உரிமை
உங்களுக்கு உண்டு ...................................................... 10

பங்குபற்றுதல்
தீர்மானங்கள் மற்றும் கவனிப்பிற்கான விருப்பத்
தெரிவுகள் ஆகிய விடயங்களில் நீங்கள்
பங்குபற்றுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு .......12

அந்தரங்கத் தன்மை மற்றும் தகவல் பாதுகாப்பு
உங்களைப் பற்றிய தகவல்கள் இரகசியமாகவும்,
பாதுகாப்பாகவும் வைக்கப்படவேண்டும் என்று கேட்கும்
உரிமை உங்களுக்கு உள்ளது.......................................16

கருத்துக்கள், பாராட்டுகள் மற்றும் புகார்கள்
நீங்கள் பெறும் கவனிப்பு குறித்த கருத்துக்களை
வெளிப்படுத்தவும், உங்களது கரிசனங்களுக்கு விடை
காணவும் உங்களுக்கு உரிமையுள்ளது .........................19



# உங்களுக்கான உடல்நல மற்றும் மருத்துவ கவனிப்பு

## உங்களுக்குள்ள உரிமைகளும் பொறுப்புகளும்

### நோயாளிகள், கவனிப்பாளர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான ஒரு வழிகாட்டிக் கையேடு

உடல்நலக் கவனிப்பை நாடும் அல்லது பெற்றுவரும் ஒவ்வொரு அவுஸ்திரேலியருக்கும் குறிப்பிட்ட சில உரிமைகளும் பொறுப்புகளும் உள்ளன. உடல்நல கவனிப்பு, பாதுகாப்பு, மரியாதை ஆகியவற்றைப் பெறவும், தொடர்பாடல் கொள்ளவும், பங்கேற்பு கொள்ளவும், தமது அந்தரங்கத் தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டவும், மற்றும் தாம் பெற்றுவரும் கவனிப்பு குறித்து கருத்து தெரிவிக்கவும் உள்ள உரிமைகள் இவற்றில் அடங்கும்.

நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசின் சுகாதார முறைமையில் இந்த உரிமைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதைப் பற்றியும், இந்த உரிமைகளுடன் சேர்ந்து வரும் பொறுப்புகளைப் பற்றியும் இக் குறுநூல் தகவல்கள் அளிக்கிறது.

ஆரோக்கியமான உடல்நலத்திற்கான கவனிப்பைப் பெறுவதிலும் பாதுகாப்பான, தரமான கவனிப்பை வழங்குவதில் பங்களிப்பு செய்யவும் உதவ வேண்டிய முக்கியமான பங்கு ஒவ்வொருவருக்கும் உள்ளது.

உடல்நல கவனிப்பைப் பெறுபவர்களுக்கும் அதனை வழங்குபவர்களுக்கும் இடையேயான உண்மையான ஒத்துழைப்பு நல்ல பயன்களுக்கு வழிவகுக்கும்.

# உடல்நல கவனிப்பைப் பெறல்

## நல்ல உடல்நலத்திற்கு அவசியமான கவனிப்பைப் பெறுவதற்கான உரிமை உங்களுக்குண்டு

பல்வேறுபட்ட உயர்தரமான உடல்நல கவனிப்பு சேவைகளை நி.ச.வே மாநில அரசின் சுகாதாரத் துறை வழங்குகிறது. உங்களது உடல்நிலையை எடுத்துக் காட்டும் மருத்துவ மதிப்பீட்டின் அடிப்படையிலும், எவ்வளவு சீக்கிரமாக உங்களுக்கு சிகிச்சை தேவைப்படுகிறது என்பதன் அடிப்படையிலும் உங்களுக்கு இச் சேவைகள் வழங்கப்படும்.

பாலினம், விவாக நிலை, அங்கவீனம், கலாச்சாரம், மத நம்பிக்கைகள், பாலியல் நாட்டம், வயது அல்லது நி.ச.வே மாநிலத்தில் ஒருவர் வாழும் இடம் ஆகியன எதுவும் கருத்தில் கொள்ளப்படாமல் உடல்நல சேவைகளை அனைவரும் பெறலாம். உங்களுக்கு தேவைப்படும் கவனிப்பு நீங்கள் வசித்துவரும் உள்ளூர்ப் பகுதியில் கிடைக்காவிட்டால் நீங்கள் வேறு இடத்திற்கு அனுப்பப்படுவீர்கள்.

'மெடிகெயர்' திட்டத்தின் கீழ் இச் சேவைகளில் சில இலவசமாகவோ அல்லது துணையாதரவு பெறும் விதத்திலோ வழங்கப்படும்.

## அவசர நிலைமைகள்

அவசர மருத்துவ உதவி தேவைப்படும் தருணம் ஒன்றில் '000' எனும் தொலைபேசி இலக்கத்தை அழைத்து 'ஆம்புலன்ஸ்' (அவசர மருத்துவ சிகிச்சை வாகனம்) ஒன்று வேண்டுமெனக் கேளுங்கள். நிரந்தர அவுஸ்திரேலியக் குடிமக்ககளுக்கு பொது மருத்துவமனைகளில் சிகிச்சை இலவசமாகும்.

உங்களது உடல்நிலை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதையும், எவ்வளவு அவசரமாக உங்களுக்கு மருத்துவ உதவி தேவைப்படுகிறது என்பதையும், எவ்விதமான மருத்துவ சிகிச்சை தேவைப்படுகிறது என்பதையும் உயர்நிலைத் தகுதி பெற்ற மருத்துவத் தொழிலர்கள் நிர்ணயிப்பர். யார் முதலில் வருகிறார்கள் என்றில்லாமல், யார் மிகவும் நோய்வாய்ப்பட்டுள்ளனர் மற்றும் யாருக்கு உடனடி கவனிப்பு தேவைப்படுகிறது என்பதைப் பொறுத்தே நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்படும்.

அவுஸ்திரேலிய அரசுடன் 'சுநஉளைசழஉயட ர்நயடவாஉயசந யுபசநநஅநவெ' எனும் உடன்படிக்கையை மேற்கொண்டிருக்கும் நாடுகளிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு வருபவர்களுக்கு உடனடியான மற்றும் அவசியமான மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டால் 'மெடிகெயர்' திட்ட வசதி இவர்களுக்கு கிடைக்கலாம். 'மெடிகெயர்' திட்ட வசதிக்கு ஒருவர் தகுதி பெறுகிறாரா என்பதை அறிவதற்குரிய அதிகத் தகவலுக்கு றறற.அநனைஉயசந.பழஎ.யர எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது 132 011 எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

## அவசரமில்லாத உடல்நல கவனிப்பு

சாதாரண நோயோ அல்லது காயமோ உங்களுக்கு ஏற்ட்டிருந்தால் பொது மருத்துவர் ஒருவரிடமோ அல்லது வேலை நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலும் செயற்படும் மருத்துவமனை ஒன்றிற்கோ நீங்கள் செல்வது நலம்.

மருத்துவர் ஒருவரையோ அல்லது வேலை நேரத்திற்கு வெளிப்பட்ட நேரத்திலும் இயங்கும் மருத்துவ நிலையத்தையோ உங்களால் அடைய இயலவில்லை என்றால், 24 மணி நேரமும் இயங்கும் *'healthdirect Australia'* எனும் மருத்துவ ஆலோசனை சேவையை 1800 022 222 எனும் இலக்கத்தில் அழைக்கலாம். பதிவு பெற்ற தாதி ஒருவர் உங்களுக்கு சிறந்த மருத்துவ ஆலோசனை வழங்குவார்.

## அறுவைசிகிச்சை வசதி

உங்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்பட்டாலும், அதற்கு அவசரம் இல்லை என்றாலும் சிகிச்சைக்காக நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம். சிகிச்சைக்காக நீங்கள் மருத்துவமனையில் காத்திருக்கும்போது இது குறித்து நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், 'காத்திருப்புக் கால ஒருங்கிணைப்பாள' (Waiting Times Coordinator) ருடன் தொடர்பு கொள்ளுங்கள். தொடர்பு விவரங்களுக்காக www.health.nsw.gov.au/hospitals/waitingtimes எனும் வலைத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்
அல்லது 'Surgery Access Line' எனும் இணைப்புடன் 1800 053 456 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

## ஆம்புலன்ஸ் சேவைகள்

'மெடிகெயர்' திட்டத்தின் கீழ் ஆம்புலன்ஸ் வசதி கிடையாது. ஆம்புலன்சை நீங்கள் அழைத்திருந்தாலும், இல்லாவிட்டாலும் ஆம்புலன்சுக்காக ஏற்படும் செலவுகள் எதையும் செலுத்தவேண்டியது உங்களுடைய பொறுப்பாகும். ஆம்புலன்சிற்கு ஆகும் கட்டணங்கள் குறித்த மேலதிகத் தகவல்களைப் பெற www.ambulance.nsw.gov.au எனும் இணையதளத்திற்குச் செல்க.

கீழ் வரும் தருணங்களில் ஆம்புலன்ஸ் கட்டணங்கள் உங்களிடமிருந்து வசூலிக்கப்படமாட்டாது:

- 'ஓய்வூதிய அட்டை', 'முன்னாள் இராணுவ வீரர் விவகார அட்டை', அல்லது 'உடல்நல கவனிப்பு அட்டை' ஒன்றை நீங்கள் வைத்திருந்தால்
- 'மூன்றாம் நபர்' (Third Party) அல்லது 'தொழிலாளர் நஷ்ட ஈடு காப்புறுதி' (Workers Compensation Insurance) ஒன்றினால் நீங்கள் காப்பு செய்யப்பட்டிருந்தால்
- சேவை அல்லது கவனிப்பு வசதிக்காக ஒரு பொது மருத்துவமனையிலிருந்து இன்னொரு பொது மருத்துவமனைக்கு உங்களை மாற்ற வேண்டிய தேவை ஏற்படும்பொழுது

## பொது மற்றும் தனியார் உடல்நல கவனிப்பு (Public and Private health care)

பொது சேவைகளை ‘பொது’ அல்லது ‘தனிப்பட்ட நோயாளி’ (public or privte patient) என்ற முறையில் பயன்படுத்தும் உரிமை உங்களுக்குள்ளது. ‘தனிப்பட்ட நோயாளி’யாக கவனிக்கப்பட வேண்டும் எனறு நீங்கள் விரும்பினால், இதற்கு ஆகும் செலவுக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள்.

வாடகை டெலிவிஷன், மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட சில மருந்துகள் மற்றும் உபகரணங்கள்  ஆகியவை ‘மெடிகெயர்’ திட்டம் அல்லது தனியார் காப்புறுதி ஆகியவற்றின்  கீழ் கிடைக்காது. இது குறித்து தெரிந்துகொள்ள ‘நோயாளி அனுமதி அலுவலக (admissions office) த்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அவசர நிலைமை ஒன்றில், இந்த செலவினங்கள் குறித்து உங்களுக்கோ அல்லது உங்கள் உடன் இருப்பவர்களுக்கோ மருத்துவமனையிலுள்ள ‘அனுமதி அலுவலக’த்தினர் தெரிவிப்பர்.



# பாதுகாப்பு

## பாதுப்பிற்கும், உயர்தரமான கவனிப்பைப் பெறுவதற்குமான உரிமை உங்களுக்கு உண்டு

உங்களுக்குத் தேவைப்படும் சேவைகளைப் பெறும் வசதி உங்களுக்கு அளிக்கப்படும். உங்களது பொருளாதார நிலை எதுவாக இருந்தாலும், தனியார் உடல்நல காப்பீட்டு வசதி (சேளையவந ாநயடவா ைளெரசயஉெந) உங்களிடம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மதிப்பீடு செய்யப்பட்ட உங்களது தேவைகளின் அடிப்படையில் உங்களுக்குத் தேவைப்படும் சிகிச்சை மற்றும் கவனிப்பு நிர்ணயிக்கப்படும்.

உயிரிழப்பைத் தடுக்கும் பொருட்டு அவசர கவனிப்பு உங்களுக்குத் தேவைப்பட்டால், உடனடியாக உங்களுக்கு அது அளிக்கப்படும்.

உங்களுக்கு இருக்கும் ஒவ்வாமைகள் (யடடநசபநைள) அல்லது நீங்கள் உட்கொண்ட மருந்துகள் உட்பட உங்களது மருத்துவ வரலாற்றை உங்களது உடல்நல கவனிப்பு வழங்குநரிடம் தெரிவிக்க வேண்டியது முக்கியமாகும்.

## ஒளிவு-மறைவற்ற தகவல் தெரிவிப்பு (Open Disclosure)

மிகவும் பாதுகாப்பான மற்றும் தரமான சேவை வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு சேவைகள் வழங்கப்படும் விதத்தை ளேறு சுகாதாரத் துறை தொடர்ந்து மீள்பார்வை செய்து வருகிறது. தீங்கு எதையும் ஏற்படுத்தவில்லை என்றாலும், வழங்கப்படும் கவனிப்பிற்கு பங்கம் விளைவிக்கும் நிகழ்வு எதனையும் குறித்த தகவல்களை நாங்கள் சேகரித்து வருகிறோம்.

உங்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை அல்லது கவனிப்பில் தவறு எதுவும் ஏற்பட்டால், கூடிய விரைவில் அதை உங்களுக்குத் தெரிவிப்போம். என்ன நடந்தது என்பதை உங்களுக்கு விளக்கமாய்ச் சொல்லி அதற்காக மன்னிப்பு கோருவோம், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து உங்களுக்கு சொல்வோம் மற்றும் இது மீண்டும் நடக்காமல் இருக்க நாங்கள் என்ன செய்கிறோம் என்பதையும் தெரிவிப்போம்.

உடல்நல கவனிப்பில் ஏற்படும் நிகழ்வுகளை நாங்கள் எப்படிக் கையாளுகிறோம் என்பது குறித்து மேலும் அறிந்து கொள்ள நீங்கள் பார்க்க வேண்டிய வலைத்தளம்:
www.health.nsw.gov.au/policies/pd/2007/PD2007_040.html



# மரியாதை

## மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடத்தப்படவும், கருத்தில் கொள்ளப்படுவதற்குமான உரிமை உங்களுக்கு உண்டு

உங்களது கலாசாரம், நம்பிக்கைகள், விழுமியங்கள் மற்றும் பாலினம் அல்லது உடலியலாமை போன்ற சொந்த விடயங்கள் ஆகியவற்றிற்கு மதிப்பும் மரியாதையும் அளிக்கும் விதத்தில் நீங்கள் நடத்தப்படுவீர்கள்.

### பார்வையாளர்கள் (Visitors)

பார்வையாளர்களை வரவேற்பதற்கு உங்களுக்குள்ள உரிமை மதிக்கப்படும், மேலும் அவர்களுடன் தனித்திருக்க உங்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

வழி நடத்தும் நாய்களுடன் உங்களைப் பார்க்க வருபவர்களை வரவேற்கும் உரிமை உங்களுக்குண்டு.

### மற்றவர்களுக்கு மதிப்பு

மரியாதையுடன் நடத்தப்படுவதற்கான உரிமை உங்களுக்குண்டு, அதே போல மற்றவர்களிடமும் இந்த நற்பண்புடன் நீங்கள் நடந்துகொள்ள வேண்டுமென நாங்கள் வேண்டுகிறோம். நாங்கள் கவனிப்பை வேண்டுபவர்கள் அல்லது கவனிப்பைப் பெறுபவர்கள், அவர்களது குடும்பங்கள் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்கள், மற்றும் பார்வையாளர்களை கீழ்வரும் விடயங்களில் உதவ வேண்டுமென்று வேண்டுகிறோம்:

- பார்வையாளர் நேரங்கள், நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் போன்ற விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கும், புகைத் தடை பகுதிகளுக்கும், மருத்துவ உபகரணங்கள் உள்ள பகுதியில் நடைமுறையிலுள்ள செல்லிடத் தொலைபேசி கட்டுப்பாடுகளுக்கும் மதிப்பளித்தல்
- சுகாதார சேவைக்கு சொந்தமான உபகரணங்கள், அங்கு இருப்பில் உள்ள பொருட்கள் அல்லது சொத்துக்களுக்கு சேதாரம் விளைவிக்காதிருத்தல் அல்லது அனுமதி இன்றி அவற்றை எடுக்காதிருத்தல்
- எவருக்கும் தொல்லை தராமலும், அவரை வையாமலும், அச்சுறுத்தாமலும் அல்லது உடல் அல்லது உளம் சார்ந்த தீங்கிற்கு ஆளாகும் அபாயத்தில் அவரைத் தள்ளாமலும் இருத்தல்

அச்சுறுத்தல், துஷ்பிரயோகம் அல்லது வன்முறையைப் பிரதிபலிக்கும் நடத்தை ஆகியவற்றைப் பொறுத்த வரை ‘சகிப்புத்தன்மை அறவே இல்லை’ எனும் கொள்ளையை நி.ச.வே. சுகாதாரத் துறை பின்பற்றுகிறது. மக்களையும், சொத்துக்களையும் பாதுகாப்பதற்கென தக்க நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம்.

நி.ச.வே மாநில அரசின் *‘Zero Tolerance Response to Violence in the NSW Health Workplace’* எனும் கொள்கை பற்றி மேலும் அறிந்துகொள்ள www.health.nsw.gov.au/policies/PD/2005/PD2005_315.html என்ற வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

# தொடர்பாடல்

## சேவைகள், சிகிச்சை, தெரிவு வகைகள் மற்றும் செலவுகள் குறித்து ஒளிவு-மறைவற்ற முறையில் தகவல்கள் வழங்கப்படுவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு.

உங்களது உடல்நிலை, உங்களுக்கென தெரிவு செய்யப்பட்டுள்ள சிகிச்சை மற்றும் இதிலுள்ள ஆபத்துகள் மற்றும் மாற்றுவழிகள் ஆகியன குறித்து உடல்நல கவனிப்பு வழங்குநர்கள் உங்களுக்கு விளக்கிச் சொல்லுவார்கள். இயன்ற அளவிற்கு மிகச் சிறந்த கவனிப்பு வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு அவர்கள் கேள்விகளும் கேட்பார்கள். திறந்த மனத்துடன் உண்மையாய் பதிலளித்தும், உங்களுக்கு விளங்காத போது கேள்விகள் கேட்டும் நீங்கள் உதவலாம்.

### உரைபெயர்ப்பாளர் சேவைகள்

நீங்கள் வேறொரு மொழி பேசுபவராக இருந்தால், உரைபெயர்ப்பாளர் ஒருவரை நீங்கள் பெறலாம். இது ஒரு இலவச சேவை. மொழிபெயர்ப்பு சேவைகளை நேரடியாகவோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ பெறலாம், மேலும் வாரம் ஏழு நாட்களுக்கும் இச் சேவை கிடைக்கும். உங்களுக்கென உரைபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்யுமாறு பணியாளர்களைக் கேளுங்கள். 'ஆஸ்லன்' (AUSLAN) (சைகை மொழி) உரைபெயர்ப்பாளர்களும் கிடைப்பர்.

### உங்களது உதவியாட்கள்

உடல்நலத் தொழிலர்களுடன் தொடர்பாடல் கொள்வதில் உங்களுக்கு உதவ உறவினர் ஒருவரையோ, கவனிப்பாளர் ஒருவரையோ அல்லது இன்னொரு உதவியாளையோ நீங்கள் வைத்துக்கொள்ளலாம், ஆனால் உங்களது விடயங்களில் இந்த நபர் ஈடுபாடு கொள்வதற்கு நீங்கள் சம்மதம் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

சில வேளைகளில், உங்களுக்கு உதவியாக இருப்பவர் 18 வயதிற்கும் கீழ்ப்பட்டவராக இருக்கலாம் என்பதை நி.ச.வே சுகாதாரத் துறை அங்கீகரிக்கிறது. இள வயது கவனிப்பாளர்கள் ஆற்றும் பணிக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். உங்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையிலும், தொடர்ந்து உங்களுக்கு வழங்கப்படும் கவனிப்பிலும் இவர்கள் உள்ளடக்கப்படுவர், மேலும் எங்கிருந்து உதவி பெறலாம் என்பது குறித்த தகவல்களும் இவர்களுக்கு அளிக்கப்படும்.

இயலாமையுடையவர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளுக்கான தேவைகள் இருக்கும் என்பதை நாங்கள் உணர்கிறோம். இத் தருணத்தில், உங்களுக்கும் உடல்நல கவனிப்பு ஊழியர்களுக்கும் உதவுமாறு குடும்ப அங்கத்தினர்களும், கவனிப்பாளர்களும், மற்ற உதவியாட்களும் கேட்கப்படலாம். இருப்பினும், உதவ வேண்டும் என்ற கட்டாயம் இவர்களுக்கில்லை.

எவ்வொரு வேளையிலும் மருத்துவ சிகிச்சை செயல்முறைக்கு ஒப்புதல் தெரிவிக்க இயலாத அளவிற்கு நீங்கள் நோயுறலாம் என்பதால் இந்த ஒப்புதலை அளிக்கக்கூடிய நபரின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்களைத் தருமாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

## தகவல் வழங்குதல்

ஒவ்வாமைகள், நோய்கள் அல்லது இயலாமைகள் எதுவும் உங்களுக்கு இருந்தால் உங்களது உடல்நல சேவைகள் வழங்குநரிடம் இது பற்றி கூடிய வரைக்கும் விவரமாகத் தெரிவியுங்கள். மருந்துகள் அல்லது நிவாரணி எதையும் நீங்கள் பயன்படுத்திவந்தாலும், நீங்கள் புகைத்தாலும், மது அல்லது பொழுதுபோக்கு போதைமருந்துகள் எதையும் பாவித்தாலும் அவர்களிடம் இதைத் தெரிவியுங்கள்.

கீழ்வருவனவற்றை உங்களது உடல்நல சேவை வழங்குநருக்குத் தெரிவியுங்கள்:

- உங்களது உடல்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் சிகிச்சையின்போது ஏற்படும் எதிர்விளைவுகள் எதனையும் பற்றி
- அதே நோய்க்காக வேறு ஒருவரிடம் நீங்கள் சிகிச்சை பெற்றுவந்தால்
- பரிசோதனைகள் அல்லது சிகிச்சைகளுக்காக நீங்கள் ஏன் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு விளங்காமலிருந்தால்
- மத அல்லது கலாசார நம்பிக்கைகளின் காரணமாக சிகிச்சையை மேற்கொள்வது கடினமாக இருந்தால்
- தனிப்பட்ட வைத்தியம் செய்துகொள்ள விரும்பி அதற்காக எவ்வளவு செலவு ஆகும் என்று தெரிந்துகொள்ள நீங்கள் விரும்பினால்
- சிகிச்சையைத் தொடரவேண்டாம் என்றும் சந்திப்புவேளைகளுக்குச் செல்லவேண்டாம் என்றும் நீங்கள் முடிவு செய்திருந்தால்

மருத்துவ செயல்முறைகள் அல்லது அறுவைசிகிச்சை எதற்கும் முன்பாகவும், கவனிப்பிற்காக வேறு ஒரு இடத்திற்கு நீங்கள் மாற்றப்படுவதற்கு முன்பாகவும் உங்களது பெயர், பிறந்த தேதி மற்றும் இதர விவரங்களை உறுதிப்படுத்துமாறு நீங்கள் அடிக்கடி கேட்கப்படுவீர்கள். உங்களது சிகிச்சை காலம் பூராக சரியான சிகிச்சைக்காக சரியான நபரிடம் உங்களுக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இது உறுதி செய்யும்.

# பங்குபற்றுதல்

## தீர்மானங்கள் மற்றும் கவனிப்பிற்கான விருப்பத் தெரிவுகள் ஆகிய விடயங்களில் நீங்கள் பங்குபற்றுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

உங்களது சிகிச்சைக்காலம் பூராகவும் உங்களது சிகிச்சைக்கான திட்டங்கள் குறித்து உடல்நல கவனிப்பு வழங்குநர்கள் உங்களிடம் கலந்துரையாடுவார்கள். வேறு சேவைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுதல் மற்றும் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்படுதல் ஆகியவை உட்பட, திட்டங்களில் பங்கு கொள்ளுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முன்பதாக கேள்விகள் கேட்குமாறும், உங்களது இதர உடல்நல கவனிப்பு சேவை வழங்குநர்களிடமும் உறவினர்களிடமும் கதைக்குமாறும் நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

எல்லா நேரங்களிலும், சூழ்நிலைகளைப் பொறுத்து, உறவினர், கவனிப்பாளர் அல்லது இதர உதவியாள் ஒருவரை உடன் வைத்துக்கொள்ளும் உரிமை உங்களுக்குள்ளது.

தமது உடல்நல கவனிப்பைப் பாதிக்கும் தீர்மானங்களில் பொறுப்பான பங்கு ஒன்றை மேற்கொள்ள *'10 Tips for Safer Health Care'* ('பாதுகாப்பான உடல்நல கவனிப்பிற்கான 10 யோசனைகள்') எனும் வழிகாட்டி நோயாளிகளுக்கு உதவுகிறது.

www.health.nsw.gov.au/quality/10tips எனும் வலைத்தளத்திலிருந்து இச் சிற்றேட்டினை இறக்கம் செய்துகொள்ளலாம்.

## வேறொரு மருத்துவரிடமிருந்து இரண்டாம் கருத்து ஒன்றைப் பெறுதல்

உங்களுக்கென சிபாரிசு செய்யப்பட்டுள்ள சிகிச்சை குறித்து இரண்டாம் கருத்து ஒன்றை நாடும் உரிமை உங்களுக்கு இருக்கிறது. உங்களது உடல்நிலையைப் பொறுத்து மாற்று மருத்துவர் ஒருவர் கிடைப்பாரா என்பது குறித்து சுகாதார சேவைத் துறை உங்களுக்கு அறிவுரை வழங்கும்.



## ஒப்புதல் (Consent)

மருத்துவ சிகிச்சை பெறுவதற்கும் முன்பாக நீங்கள் ஒப்புதல் அளிக்கவேண்டியது கட்டாயமாகும். பெரும்பான்மைத் தருணங்களில் இது வாய்மொழி மூலமான ஒப்புதலாகும். அறுவைசிகிச்சை போன்ற சில செயல்முறைகளுக்கு எழுத்து மூலமான ஒப்புதல் வேண்டப்படுகிறது.

ஒப்புதல் அளிக்காமல் இருப்பதற்கான உரிமை உங்களுக்குள்ளது. அப்படிப்பட்ட வேளையில் நீங்கள் சிகிச்சை பெறமாட்டீர்கள். உயிருக்கு ஆபத்தூட்டும் அவசரநிலை ஒன்றில் நீங்கள் மிகவும் நோய்வாய்ப்பட்டோ அல்லது சுயநினைவற்றோ இருக்கும்போது ஒப்புதல் வேண்டப்படுவதில்லை.

### *மற்றவர்களால் அளிக்கப்படும் ஒப்புதல்*

14 வயதிற்கும் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவரது ஒப்புதல் இருக்கவேண்டியது கட்டாயமாகும்.

14-லிருந்து 16 வயதிற்கு இடைப்பட்ட வயதுடைய சிறுவர்கள் பொதுவாக தமது ஒப்புதலை தமது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களுடன் சேர்ந்து தருவார்கள் இருப்பினும், அளிக்கப்படவிருக்கும் சிகிச்சையை அவர்கள் நன்கு புரிந்துகொள்ளும் பட்சத்தில் தமது தனி ஒப்புதலை அவர்கள் அளிக்கலாம்.

நீங்கள் சுயநினைவை இழந்திருந்தாலோ அல்லது ஒப்புதல் அளிக்க இயலாத அளவுக்கு நோயுற்றிருந்தாலோ, உங்களுக்கு மிகவும் நலம் பயக்கக்கூடியது என்று தகுதி பெற்ற மருத்துவத் தொழிலர்களால் கருதப்படும் சிகிச்சையை உங்களுக்கு அளிப்பதற்கான ஒப்புதலை ஒரு உறவினரோ, கவனிப்பாளரோ அல்லது உங்களுக்கு நெருக்கமான ஒருவரோ அளிக்கலாம்.

அப்படிப்பட்ட நபர் கிடைக்கவில்லை என்றால், 'பாதுகாவலர் முறைமன்ற' (Guardianship Tribunal) த்தினர் ஒப்புதல் அளிக்கலாம். மேலதிகத் தகவல்களுக்கு www.gt.nsw.gov.au எனும் இணையதளத்தினைப் பாருங்கள் அல்லது 1800 463 928 எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

## ஆய்வு மற்றும் கல்வியறிவு

நீங்கள் கவனிப்போ அல்லது சிகிச்சையோ பெற்றுவரும்போது பயிற்சி பெற்றுவரும் மாணவர்களோ அல்லது சுகாதார ஊழியர்களோ உடன் இருக்க நீங்கள் சம்மதிக்கிறீர்களா என்று உங்களிடம் கேட்கப்படலாம். தொழில் திறன் வளர்ச்சிக்கு இந்த வழக்கம் பங்களிப்பாற்றுகிறது. மருத்துவ ஆய்வில் பங்கேற்குமாறும் நீங்கள் கேட்கப்படலாம்.

இவ் வேண்டுகோள்களுக்கு இல்லை என்று பதிலளிக்கும் உரிமை உங்களுக்கிருக்கிறது. உங்களது முடிவு உங்களுடைய பதிவுகளில் குறிப்பிடப்படமாட்டாது, மற்றும் உங்களது சிகிச்சையின் மீதோ அல்லது எதிர்காலத்தில் நீங்கள் சேவை பெற முயலும்போதோ இது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

## சமூகத்தினரது ஈடுபாடு

உள்ளூர் சுகாதார சேவைகளைத் திட்டமிட்டு வழங்கும் பணியில் உள்ளூர் சமூகத்தினரை ஈடுபடுத்த நி.ச.வே மாநில சுகாதாரத் துறை முனைகிறது. நீங்கள் ஈடுபாடு கொள்ள விரும்பினால் உங்களது உள்ளூர் 'சுகாதார சேவை'யில் அமைந்துள்ள 'நுகர்வோர் மற்றும் சமூகத்தினர் ஈடுபாட்டு அலுவலக' (community participation office) த்துடன் தொடர்பு கொள்ளவும்.



# அந்தரங்கத் தன்மை மற்றும் தகவல் பாதுகாப்பு

## உங்களைப் பற்றிய தகவல்கள் இரகசியமாகவும், பாதுகாப்பாகவும் வைக்கப்படவேண்டும் என்று கேட்கும் உரிமை உங்களுக்கு உள்ளது

உங்களைப் பற்றிய மருத்துவத் தகவல்கள் பாதுகாப்பாக வைக்கப்படும். உங்களது சிகிச்சை குறித்து முடிவெடுப்பதில் உதவும் பொருட்டு மற்ற சுகாதார கவனிப்பு வழங்குநர்களுடன் இத் தகவல்கள பகிர்ந்து கொள்ளப்படலாம்.

உங்களது உடல்நிலை மற்றும் சிகிச்சை குறித்த தகவல்களின் இரகசியத் தன்மை பராமரிக்கப்பட வேண்டும் எனக் கேட்கும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.

### மருத்துவப் பதிவேட்டில் இருக்கும் தகவல்கள் குறித்த உரிமை

உங்களுடைய மருத்துவப் பதிவேட்டிலிருக்கும் தகவல்கள் குறித்து சுகாதார கவனிப்பு ஊழியர் ஒருவரிடம் கதைக்கும் உரிமை உங்களுக்கிருக்கிறது. உங்களது மருத்துவப் பதிவுகளின் பிரதி ஒன்று வேண்டுமெனவும் நீங்கள் கேட்கலாம்.

மருத்துவப் பதிவேட்டுப் பிரதி ஒன்றைப் பார்ப்பதற்கு அல்லது அதைப் பெறுவதற்கான வேண்டுகோள் நீங்கள் சிகிச்சை பெற்ற உடல்நல சேவையின் மேலாளருக்கு செய்யப்படவேண்டும்.

அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால், குடும்ப உறுப்பினர் அல்லது சட்டப்படியான பாதுகாவலர் ஒருவர் போன்ற இதர நபர்களால் உங்களது மருத்துவப் பதிவினைப் பார்க்க இயலும். மேலதிகத் தகவலுக்கு நீங்கள் பார்க்க வேண்டிய வலைத்தள விவரம்:
www.health.nsw.gov.au/policies/pd/2005/PD2005_593.html

### தகவல் பாதுகாப்பினை மீறல்

சில வேளைகளில் உங்களுடைய மருத்துவப் பதிவிலிருக்கும் தகவல்கள் உங்களது உடல் அல்லது மன நலனைத் தீவிரமாய்ப் பாதிக்கக்கூடும் என்று உங்களது மருத்துவர் தீர்மானிக்கலாம். மற்ற வேளைகளில் மருத்துவப் பதிவேட்டின் உள்ளடக்கங்கள் இன்னொரு நபருடைய அந்தரங்கத் தன்மையைப் பாதிக்கலாம். இப்படிப்பட்ட வேளைகளில் உங்களது மருத்துவப் பதிவுகளைப் பார்ப்பதற்கான அனுமதி உங்களுக்கு மறுக்கப்படலாம்.

இந்த விடயத்தைப் பற்றி மேலும் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் உங்களுக்கும், அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மற்றவர்களுக்கும் உள்ளது.

*Health Privacy Legislation (section 12.3) (சுகாதார தகவல் பாதுகாப்பு சட்டம் (பிரிவு 12.3))* என்ற சட்டத்தின் கீழ், மருத்துவப் பதிவேட்டில் அடங்கியுள்ள விடயங்களை மீள் பரிசீலனை செய்து பரிந்துரை வழங்குமாறு யாரையும் சாராத, சுதந்திர மருத்துவர் ஒருவர் வேண்டுமென நீங்கள் கேட்கலாம்.

அனுமதி இப்போதும் மறுக்கப்பட்டால், 'உள்துறை மறுபரிசீலனை' (internal review) ஒன்றை நடத்துமாறு சுகாதார சேவையிலுள்ள மூத்த மேலாளர்களை நீங்கள் வேண்டலாம்.

மேலதிகத் தகவல்களுக்கு உங்களது உடல்நல சேவையிலுள்ள 'தகவல் பாதுகாப்பு தொடர்பு அதிகாரி' (Privacy Contact Officer) யுடன் தொடர்பு கொள்ளுங்கள், அல்லது www.health.nsw.gov.au/policies/gl/2006/GL2006_007.html எனும் இணையதளப் பக்கத்திற்குச் செல்லுங்கள்

'நி.ச.வே மாநில தகவல் பாதுகாப்பு ஆணைய' (NSW Privacy Commissioner) ரும் தகவல் பாதுகாப்பு குறித்த புகார்களை விசாரிக்கலாம். மேலதிக விவரங்களுக்கு நீங்கள் செல்ல வேண்டிய வலைப் பக்கம்: www.lawlink.nsw.gov.au/privacynsw

உள்துறை மறுபரிசீலனையின் தீர்மானத்தில் உங்களுக்கு திருப்தியில்லை என்றால், 'நிர்வாக தீர்ப்புகள் முறைமன்ற' (Administrative Decisions Tribunal) த்திற்கு விண்ணப்பிக்கும் உரிமை உங்களுக்கு இருக்கிறது. மேலதிக தகவல்களுக்கு நீங்கள் பார்க்க வேண்டிய வலைத்தளப் பக்கம்: www.lawlink.nsw.gov.au/adt .



## மருத்துவத் தகவல்கள் வெளிப்படுத்தப்படும் விசேட சூழ்நிலைகள்

மருத்துவத் தகவல்களின் அம்சங்கள் விசேட சூழ்நிலைகளில் வெளிப்படுத்தப்படலாம். இவற்றில் அடங்குவன:

- தொற்றுநோய்கள் குறித்து தெரிவித்தல்
- சந்தேகிக்கப்படும் குழந்தை துஷ்பிரயோகம் குறித்து தெரியப்படுத்துதல்
- ஒருவரது உடல்நலம் அல்லது பொதுநலத்திற்கு கடுமையான ஆபத்து இருக்கும் சூழ்நிலையில்
- காணாமற் போன ஒருவரைத் தேடும்போது
- நீதிமன்ற உத்தரவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ள போது அல்லது குற்றங்கள் புரியப்பட்டு சட்டம் அமுல்படுத்தப்படுவதற்காக தகவல் தேவைப்படும்போது

ஆராய்ச்சித் திட்டங்களுக்காகவும் ஒருவரது உடல்நலம் பற்றிய சொந்தத் தகவல்களின் அம்சங்கள் தெரியப்படுத்தப்படலாம். இத் தருணத்தில், நோயாளியைப் பற்றிய தகவல்கள் கறாரான சம்பிரதாய விதிகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும், மற்றும் 'மானிட ஆராய்ச்சி மற்றும் நன்னெறிகள் ஆணைய' (Human Research and Ethics Committee) த்தினரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

www.health.nsw.gov.au/policies/pd/2005/PD2005_593.html எனும் இணையதளத்தில் தகவல் பாதுகாப்பு குறித்த மேலதிக விபரங்களைக் கொண்ட ஆங்கிலம் மற்றும் இதர மொழிகளிலுள்ள சிற்றேடு உள்ளது.

# கருத்துக்கள், பாராட்டுகள் மற்றும் புகார்கள்

## நீங்கள் பெறும் கவனிப்பு குறித்த கருத்துக்களை வெளிப்படுத்தவும், உங்களது கரிசனங்களுக்கு விடை காணவும் உங்களுக்கு உரிமையுள்ளது

சுகாதாரக் கவனிப்பு குறித்த உங்களது கருத்துரைப்புக்களுக்கு செவி மடுக்க நி.ச.வே சுகாதாரத்துறை விழைகிறது. காரியங்களில் எப்போது முன்னேற்றம் தேவை என்பதையும், எப்போது சேவைகள் சரியாக வழங்கப்படுகின்றன என்பதையும் தெரிந்துகொள்வது முக்கியமானதாகும்.

### பாராட்டுகள்

உயர்தர கவனிப்பு வசதியில் நீங்கள் எதை நாடுகிறீர்கள் என்பதை பாராட்டுகள் தெளிவாய்ச் சுட்டிக் காட்டுகின்றன. சுகாதார ஊழியர்களது மனமகிழ்வை உயர்த்தி அவர்களுக்கு இவை ஊக்கமளிக்கின்றன. பாராட்டுகள் உரியவர்களைச் சென்றடைவதை உடல்நல சேவைகள் உறுதிப்படுத்துகின்றன.

### புகார்கள்

முதல் தருணத்திலேயே, உங்களது உடல்நல சேவை வழங்குநருடன் புகார்களுக்குத் தீர்வு காண்பது மிகவும் நல்லது. என்ன நடந்தது என்பதை அமைதியான முறையில், முடிந்த அளவு தெளிவாகச் சொல்லி எவ்வாறு பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவியுங்கள்.

உரையாடல் நடந்த திகதி, நேரம், பேசப்பட்ட விடயம், மற்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கக் கூடிய ஒப்பந்தங்கள் ஆகியவற்றைக் குறித்துவைத்துக் கொள்வது நல்ல யோசனையாகும்.

மாறாக, அலுவலக நேரங்களில் 'சுகாதார மேலாளர்' (health manager) அல்லது 'நோயாளி உதவி அதிகாரி' (patient support officer) ஆகியோருடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். இந்த நேரங்களுக்கு அப்பாற்பட்ட வேளைகளில் பணியிலிருக்கும் மூத்த தாதியுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். உங்களது புகார் இரகசியமாகக் கையாளப்படுகிறது என்பதையும், கீழ்வரும் விடயங்களையும் இவர்கள் உறுதி செய்வர்:

- சேவைகள், கொள்கைத்திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் குறித்த கேள்விகளுக்கு பதிலளித்தல்
- உங்களது அக்கறைகள் என்ன என்று அடையாளம் காண்பதில் உதவுதல்
- மருத்துவமனையில் உங்களுக்கு அவசியப்படும் குறிப்பிட்ட தேவைகளில் உதவுதல்

- புகார் கையாளப்படும் முறை மற்றும் இதன் முடிவு குறித்து உங்களுக்குத் தெரியப்படுத்துதல்

முடிவில் உங்களுக்குத் திருப்தி இல்லையெனில், உங்களது சுகாதார சேவையுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

## ‘சுகாதார கவனிப்பு புகார் ஆணையம்’ (Health Care Complaints Commission)

ர்ஊஊஊ என்பது பொது சுகாதார முறைமைக்கு அப்பாற்பட்டு தனித்தியங்கும் ஒரு அமைப்பாகும். ர்ஊஊஊ-யில் எவரும் புகார் ஒன்றை சமர்ப்பிக்கலாம். புகார்கள் எழுத்து வடிவில் இருக்கவேண்டும், மேலும் உங்களுக்கு உதவக்கூடிய அலுவலர்கள் உள்ளனர். பார்க்க: www.hccc.nsw.gov.au. 131 450 எனும் இலக்கத்தில் ர்ஊஊஊ அமைப்பிற்கு தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை வசதி உள்ளது.

*‘Your Health Care Concerns’* என்ற வலைத்தளத்தில் மேலதிகத் தகவல்கள் காணப்படும். செல்க: www.health.nsw.gov.au/hospitals/healthcare